உ சிவமயம்



ACCNO 39258

பாகனேரி

ராம. முத்துப்பழனியப்ப செட்டியார்

கண்ணாத்தாள் ஆச்சி அவர்களின்

# அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழாவில் வழங்கிய அன்பளிப்பு

பிரமாதீச ௵ பங்குனி ௴ 24௳

**6—4—74**

அச்சிட்டு வழங்கியவர்கள் :

K. பழனியப்பன், (தேவகோட்டை)

PL. பழனியப்பன், (சொக்கனாதபுரம்)



ராம. மு. பழ. முத்துப்பழனியப்ப செட்டியார்
கண்ணாத்தாள் ஆச்சி

ஓம்



ஸ்ரீ கற்பகமூர்த்தி பிள்ளையார்பட்டி

முற்பவத்தில் யான்புரிந்த தீவினைகள்
முழுதகற்றும் முகத்தினனை
அற்பசுகத்துள் எனையழுத்தா ஐங்கரனைப்
பிற்பவமு மகற்றுங் கோவை
சொற்பொழுது புரியாத வணிகர்குலுந்
தினம்ப ணியுந்துணைத் தாளானைக்
கற்பகத்தின் விடியகற்றுங் கற்பகமாம்
விநாயகனைக் கருத்தில் வைப்பாம்.

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
A. 39258

உ

முருகா

திருமுருக கிருபானந்த சுவாமி அவர்கள் இயற்றிய

# இறைவழிபாடு

## இறைவன் :

எங்கும் நிறைந்தவன் இறைவன். இறை என்ற சொல் 'இறு' என்ற பகுதி அடியாகப் பிறந்தது. சரம் அசரம் என்ற எல்லாப் பொருள்களிலும் தங்கியிருப்ப வன் இறைவன்.

*''பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணனந்தமே''*

*''அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய்*
*ஆனந்தபூர்த்தியாகி அருளொடு நிறைந்தது''*

உடம்பிலே உயிரும், உயிரிலே இறையும் தங்கி யிருக்கின்றன. உதை பந்து; 'பந்துக்குள் பிளாடர்' அதற்குள் காற்று என்பதுபோல் எல்லாப் பொருள் களையும், எல்லா உயிர்களையும் இயக்குகின்றதனுல் அப் பரம் பொருள் இயவுள் எனப் பேர் பெற்றது. ''பெரும்பெயர் இயவுள்'' என்பார் நக்கீரர். எல்லா வற்றையும் கடவுவதனுல் கடவுள் எனவும் பேர் பெற்றது.

ஒரு மருத்துவமனையில் மருத்துவர் தங்கியிருப்ப தன் நோக்கம், அம்மருத்துவ மனையில் உள்ள பிணி

யாளர்களின் பிணிகளைப் போக்குவதேயாகும். அதுபோல், இறைவன் எல்லா உயிர்களிலும் தங்கி அவ்வுயிர்களின் பிறவிப்பிணியைப்போக்குகின்றனன்.

*"உள்ளொடு புறங்கீழ் மேலாய்*
*உயிர்தொறும் ஒளித்து நின்ற கள்வன்"*

என்பார் பரஞ்சோதி முனிவர்.

*"அண்டமும் அளவிலாத உயிர்களும் ஆகமாகக் கொண்டவன்"*

என்பதும் இவருடைய திருவாக்கு.

இன்னணம் இறைவன் எங்கும் இருப்பினும் ஞானிகள் திருவுள்ளத்திலும், திருக்கோயில்களிலும் சிறப்பாக விளங்கித் தோன்றுகின்றான். ஏனைய இடங்களில் இறைவன் மறைந்திருக்கிறான்.

*"ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே"*

— மாணிக்கவாசகர்.

பாலில் நெய் மறைந்திருப்பது போல் பிற இடங்களில் இறைவன் நிறைந்து மறைந்திருக்கின்றான். கடைந்த தயிரில் வெண்ணெய் திரண்டு உருண்டு வெளிப்பட்டிருப்பதுபோல் ஞானிகள் உள்ளத்திலும், திருக்கோயிலிலும் இறைவன் விளங்கிக் காட்சியளிக்கின்றான்.

மற்ற இடங்களில் இறைவனை நினைந்து தியானிப்பதனாலும், துதிப்பதனாலும் வழிபடுவதனாலும் வினைகள்

வெதும்புகின்றன. கோயிலில் இறைவனை வழிபட்டால், வினைகள் வெந்து எரிந்து, கரிந்து நீருகி விடுகின்றன.

கொடிய வெய்யிலில் ஒரு துணியை வைத்தால் அத்துணி வெதும்புமேயன்றி வெந்து சாம்பலாகாது. சூரியகாந்தக் கண்ணுடியை வெய்யிலில் வைத்து அதன் கீழ் வரும் மற்றொரு வெய்யிலில் துணியை வைத்தவுடனே அத்துணி சாம்பலாகி விடுகின்றது. நேர் வெய்யிலுக்கு இல்லாத ஆற்றல் சூரியகாந்தக் கண்ணுடியின் கீழே வருகின்ற வெய்யிலுக்கு உண்டு.

பரந்து விரிந்து இருக்கின்ற கதிரவனுடைய வெப்பத்தை ஒன்றுபடுத்தித் தன் கீழே சூரியகாந்தக் கண்ணுடி பாய்ச்சுகின்றது. பிற இடங்களில் இறைவனை வழிபடுவது வெய்யிலில் வேட்டியை வைப்பது போலாகும். திருக்கோயிலில் இறைவனை வழிபடுவது சூரியகாந்தக் கண்ணுடியின் கீழ் வைப்பதுபோலாகும். ஆதலால் திருக்கோயில் வழிபாடு இன்றியமையாததாகும்.

*"மாலறநேயம் கலிந்தவர் வேடமும்*
*ஆலயந்தானும் அரன்எனத் தொழுமே"*

என்பது சிவஞான போதம்.

திருக்கோயில்களிலுள்ள திருவுருங்கள் தேவர்களாலும், முனிவர்களாலும், நால்வர், ஆழ்வார்கள் ஆகிய ஆன்ருேர்களாலும் நிறுவப்பெற்ற காரணத்

தால் அவை மேன்மை பெற்று வழிபடுவோருடைய வல்வினைகளையகற்றி, வேண்டிய வரங்களை வழங்கி அருள் புரிகின்றன.

பசுவின் உடல் முழுவதும் பால் பரவியிருப்பினும் மடியின் மூலமாக அதனைப் பெறுவதுபோல், எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனுடைய திருவருளைத் திருக்கோயில்களில் உள்ள திருவுருங்கள் மூலமாக நாம் பெறுதல் வேண்டும்.

ஒரு பறவை இரு சிறகுகளைக் கொண்டு பறப்பது போல், இறை வழிபாட்டிற்குப் பூவும் நீரும் வேண்டப் படுகின்றன.

*''புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு*
*அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்''*

என்பது திருமந்திரம். எங்கும் நிறைந்த இறைவனை, எங்கும் எளிதாகக் கிடைக்கக்கூடிய பூவினாலும், நீரினாலும் நாம் வழிபட வேண்டும். வழிபாட்டிற்கு அன்பும், ஆசாரமும் இரண்டு கண்கள் போன்றவை.

*''அன்புடன் ஆசார பூஜை செய்து*
*உய்ந்திட வீணாள் படாது அருள்புரிவாயே!''*

என்று அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்.

திருக்கயிலாய மலையில் பார்வதி பரமேஸ்வரர் மீது விளையாட்டாக வில்வக் கிளையை உதிர்த்த குரங்கு

அபுத்தி பூர்வமாகச் செய்த அச் சிவ புண்ணியத்தால் பூவுலகிற் பிறந்து, முசுகுந்தச் சக்கரவர்த்தி என்ற பெயருடன் மூவுலகும் ஆண்டது.

*''வில்வக் கிளையுதிர்த்த வெய்ய முசுக்கலையைச்*
*செல்வத் துரை மகனாய்ச் செய்தனையே''*

*— திருவருட்பா.*

இறைவழிபாடு செய்து மார்க்கண்டேயர் மறலியை வென்ற வரலாறு உலகம் அறிந்த ஒன்று.

ஆத்ம ஜோதியில் அருட்ஜோதி சூழ சிவஜோதி விளங்குகின்றது.

ஆதம் ஜோதி—வட்டமாகிய கல்.
அருட்ஜோதி—சூழ்ந்திருக்கின்ற ஆவுடையார்.
சிவஜோதி—மேல் நோக்கிய இலிங்கம்.
இதுதான் சிவலிங்கத்தின் உண்மை.

*''ஜோதியுள் ஜோதியுள் ஜோதி''*

என்பார் இராமலிங்க அடிகளார்.

கோயில் ஐந்து பிரகாரங்களோடு கூடியது. இந்த உடம்பே இறைவன் இருக்கின்ற திருக்கோவில். இந்த உடம்பும் **அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம்** என்ற பஞ்சகோசங்களையுடையது.

உடம்பில் 32 கட்டுகளோடு கூடிய முதுகுத் தண்டே திருக்கோயில் கொடிமரமாகக் காட்சியளிக்கிறது. கொடி மரத்தில் கொடி ஏறியவுடன் இறைவன் வெளியே வந்து காட்சியளிக்கிருன். அதுபோல் முதுகெலும்பாகிய வீணுதண்டத்தில் வளேந்து செல்லுகின்ற சுழுமுனே என்ற வெள்ளே நரம்பின் வழியாகப் பிராணவாயு ஆருதாரங்களேயும் கடந்து, பிரமந்திரத்தைத் தாண்டி சகஸ்ரார வெளியிலே சென்றவுடன் சிவஜோதி காணப்படும்.

திருக்கோயிலில் விளங்கும் பத்திர இலிங்கமாகிய பலிபீடம் பாசத்தையும், நந்திதேவர் பசுவையும், சிவலிங்கம் பதியையும் குறிப்பிடுகின்றன.

நமது சரீரத்தில் உள்ள மூலாதாரமும், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களேயும் கோயிலில் உள்ள யாக மண்டபம், அலங்கார மண்டபம், கல்யாண மண்டபம், நிருத்த மண்டபம், மகாமண்டபவம், அர்த்த மண்டபம் என்ற மண்டபங்கள் தெரிவிக்கின்றன. எனவே திருக்கோயிலில் சென்று இறைவனே வழிபட்டு அங்கே கண்ட பரம்பொருளே நம் உடம்புக்குள்ளேயும் கண்டு மஞேலயம் பெறவேண்டும்.

*''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்*
*வள்ளல் பிராஞர்க்கு வாய் கோபுரவாசல்*
*தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்*
*கள்ளப் புலனேந்தும் காளா மணிவிளக்கே''*

*- திருமந்திரம்.*

கட்டையில் கனல் மறைந்திருக்கின்றது. ''விற கிற்றீயினன்'' என்கின்ருர் அப்பர் பெருமான். கட்டையைக் கடைந்தவுடன். அதில் மறைந்த கனல் வெளிப்பட்டுக் கட்டை கனலாகக் காட்சியளிப்பது போல், உயிரில் ஒளிந்திருக்கின்ற இறைவனை ஞானத்தால் கடைவோமாயின் சிவம் வெளிப்பட்டுச் சீவனைச் சிவமாக்கிக்கொள்ளுகிறது.

எண்ணில் காலமாக எண்ணில்லாத உடம்பு எடுத்து வருகின்ற நாம் இறைவனை மெய்யன்புடன் உள்ளம் குழைந்து உருகி மலரிட்டு அர்ச்சனை செய்து வழிபட்டால் பிறவி நோய் தீரும்.

*''கன்றெடுத்து விளவெறிந்து காலெடுத்த*
*மழைக்குடைந்த காலிகாக்கக்*
*குன்றெடுத்த மால்விடையின் கொடியெடுத்து*
*வடிதெடுத்துக் கூறுத*
*மன்றெடுத்த சேவடியின் மலரெடுத்துச்*
*சாத்தியபின் வழிபட்டோர்கள்*
*இன்றெடுத்த வுடற்பிறவி யினியெடா வண்ண*
*மெண்ணம் எய்துவாரே''*
*– சிவ ரகசியம்.*

### தெய்வம் ஒன்று

திருக்கோயில்களில் சிவலிங்கம், தக்ஷிணுமூர்த்தி, நடராஜர், சந்திரசேகர், அம்பிகை, விநாயகர், முருகர், திருமால் என்ற பல மூர்த்திகள் இருப்பினும், அவைகள் அனைத்தும் ஒரே மூர்த்திதான்.

நெருப்பு—சிவபெருமான்
நெருப்பில் உள்ள சூடு—அம்பிகை
நெருப்பில் உள்ள செம்மை நிறம்—விநாயகர்
நெருப்பில் உள்ள ஒளி—முருகவேள்.

*"சுடரோ சிவபெருமான் சூடுபரா சக்தி*
*திடமார் கணநாதன் செம்மை-படரொளியோ*
*கந்தவே ளாகும் கருதுங்கால் சற்றேனும்*
*வந்ததோ பேத வழக்கு"*

மலர்—சிவபெருமான்
மலரின் வடிவம்—அம்பிகை
மலரின் நிறம்—கணபதி
மலரின் மணம்—மயிலவன்

நூல்—சிவபெருமான்
நூலில் அகலம்—பார்வதி
நூலின் நீளம்—கணேசர்
நூலின் கனம்—குமாரக் கடவுள்

சிவபெருமானுடைய சக்திகள் நான்கு:— அருள் சக்தி, போர் சக்தி, கோப சக்தி, புருஷ சக்தி.

அருள் சக்தி—பார்வதி
போர் சக்தி—காளி
கோப சக்தி—துர்க்கை
புருஷ சக்தி—விஷ்ணு

*"அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே"* என்பது அப்பர் வாக்கு.

முக்கண்ணன்—முக்கண்ணி
சங்கரன்—சங்கரி
திரிபுரசுந்தரன்—திரிபுரசுந்தரி

என்பது போல், அரன்—அரி என வந்தது, ஆகவே திருமாலின் வழிபாடும், அம்பிகையின் வழிபாடும் ஒன்றென உணர்க.

திருக்கோயில்களில் காட்சியளிக்கும் துவாரபாலகர்களில் ஒருவர் ஆள் காட்டு விரலைக் காட்டி நிற்பது உள்ளே வழிபடச் செல்வோர்க்குக் கடவுள் ஒன்றே என்பதை அறிவுறுத்துகிறது மற்றொரு துவாரபாலகர் ஒரு கையை விரித்துக் காட்டுவது, கடவுள் ஒன்றைத் தவிர வேறொன்றில்லை என்பதை உணர்த்துகிறது. இதையே **"ஏகம் ஏவ அத்விதீயம் ப்ரம்பம்"** என்று வேதம் கூறுகிறது. கடவுள் ஒன்றேதான்: இரண்டாவது இல்லை என்பது இதன் பொருள்.

எனவே, தெய்வ வழிபாடு செய்வோர், தெய்வ பேதம், மூர்த்தி பேதம் குறித்து மாறுபட்டு மலையாது நிலையாய அன்புடன் ஒரு பொருளைத் தியானித்து வழிபடவேண்டும்,

*"யாதொரு தெய்வங் கொண்டீர்*
*அத்தெய்வமாகி யாங்கே*

*மாதொரு பாகனார்தாம் வருவர்''*

*—சிவஞானசித்தியார்*

*''ஆரொருவர் உள்வார் உள்ளத்துள்ளே*
*அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்''*

*- அப்பர்*

ஒரு காகிதத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போல், தெய்வத்திற்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று தட்பம்; மற்ரென்று வெப்பம். வெப்பமும் தட்பமும் சமமாக இருந்தால்தான் மலர் மலராகக் காட்சியளிக்கும். வெப்பம் மிகுந்தால் மலர் வாடும்; தட்பம் மிகுந்தால் மலர் அழுகும்.

இந்த உடம்பும் சீதோஷ்ணத்தால் தான் வாழ்கின்றது. ஒரு சமயம் இந்த உடம்பில் சூடு குறையுமானால் சுற்றத்தார் சூழ்ந்துகொள்வார்கள். மருத்துவவர் வந்து "TOO LATE" என்று கூறி, அவர் விரும்பியதெல்லாம் கொடுங்கள்''என்று சொல்லுவார் ஆகவே, உலகிற்கு வெப்பமும் தட்பமும் இன்றியமையாதவை. வெப்பத்தின் நூண்மை சிவம். தட்பத்தின் நூண்மை திருமால். வெப்பத்தின் நிறம் சிவப்பு, தட்பத்தின் நிறம் பச்சை. எனவே, சிவமூர்த்தி பவளம் போல் மேனியன். திருமால் பச்சை மலை போல் மேனியன். சிவம் அனல் ஏந்தி விளையாடுகின்றது. திருமால் ஆழியிடத்தை துயிலுகின்ருர். சிவாலயத்தில் வெந்த நீற்றையும், விஷ்ணு கோயிலில் தீர்த்தப் பிரசாதத்தையும் வழங்குகின்ருர்கள்.

பாதி சிவம், பாதி விஷ்ணு, இந்தத் தத்துவத்தைச் சிவமூர்த்தங்கள் இருபத்து ஐந்தனுள் கேசவார்த்த மூர்த்தம் என்பது தெரிவிக்கின்றது. சங்கர நாராயணர் கோவிலும் இதற்குச் சான்று.

*''தாழ்சடையும் நீள்முடியும் ஒள்மழுவும் சக்கரமும்*
*சூழரவும் பொன்நாணும் தோன்றுமால்-வீழும்*
*திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்*
*கிரண்டுருவும் ஒன்ருய் இசைந்து''*

என்று ஆழ்வார் கூறுகிருர்.

சிதம்பரம், திருநெல்வேலி, காஞ்சீபுரம், திருக்குற்ருலம், திருவருணை முதலிய திருத்தலங்களில் உள்ள சிவாலயங்களில் திருமாலும் காட்சிதருகின்ருர்

**ஏன் வணங்க வேண்டும் ?**

நம்மிடைப் பலருக்கும் இறைவனை ஏன் வணங்க வேண்டும்? வணங்காவிடில் என்ன? மனித வாழ்வில் இறையுணர்ச்சி இல்லாமல் வாழ முடியாதா ? நாம் வணங்காவிடில் கடவுளுக்கு என்ன நஷ்டம் ? என்ற விஞக்கள் உள்ளுணர்வில் எழுதுவது இயல்பு. இவைகளுக்கு விடை காண முயல்வது முறை.

விலங்குகளும் உண்ணுகின்றன; உலாவுகின்றன; வம்சத்தை வளர்க்கின்றன. மனிதர்களாகிய நாமும் உண்ணுகின்ருேம்; உறங்குகின்ருேம்; உலாவுகின்ருேம்; மக்களைப் பெறுகின்ருேம். இவை விலங்குகட்

கும் மனிதர்கட்கும் ஒன்ருகவே அமைந்திருக்கின்றன விலங்குகளினின்றும் மனிதன் உயர்ந்து காட்சியளிப்பது தெய்வ உணர்ச்சி ஒன்ருலேயேதான்.

ஒரு கானகத்தில் விலங்கு மாநில மாநாடு கூடிற்று. அதில் தலைமை தாங்கிய சிங்கம் "விலங்குத் தோழர்களே! உயிர் வாழ்க்கைக்கு ஆடை அவசியமா? மனிதர்கள் ஆடைக்கு அவசியமின்றி அதிகம் செலவழிப்பது அறிவின்மையாகும். அது வருந்தத்தக்கது; கண்டிக்கத்தக்கது" என்று கூறிற்று. இதுபோல் மனித வாழ்க்கைக்குக் கடவுள் வணக்கம் தேவையா? நாங்கள் கடவுளை வணங்காமல் வாழவில்லையா? என்று வினவுவார்கள். **மானம் உள்ளவன் ஆடை உடுப்பான். மனம் உள்ளவன் இறைவனை வணங்குவான்.**

மனிதன் செய்கின்ற பாவங்களுக்கெல்லாம் கழுவாய் உண்டு. நன்றி கொன்ற பாவத்திற்கு மட்டும் கழுவாய் இல்லை.

"எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம்;
உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" —திருக்குறள்

"ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும்
மாணிழை மகளிர் கருச் சிதைத்தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமையோர்க்கும்

வழுவாய் மருங்கின் கழுவாயும் உளஎன
நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம் பாடிற்றே.'' (புறநானூறு 34)

எனவே, கழுவாய் இல்லாதபாவம் நன்றி கோறல் ஆகும், இதற்கு நேர் மறுதலையாக சிறந்த புண்ணியம் நன்றிமறவாமையாகும். இந்த உடம்பையும், உடம்பின் உறுப்புக்களையும், உளஞறை கருவி காரணங்களையும் தந்தவன் இறைவன். கண்ணைக் கொடுத்த இறைவன் கண் தூசுபட்டு மங்காமல் இருக்கும் பொருட்டு, கண்ணிற்குக் கதவு போல் இமையும் கொடுத்தான். அந்த இமையின் நுனியில் உரோமங்களையும் அமைத்தான். உணவு உண்ணுகின்ற வாயில் உணவைத் துகள் படுத்த (Flour Mill) பற்களையும் கொடுத்தான். வாய்க்குள் நுழையின்ற பொருள் நல்லனவா? அல்லனவா? என்று சோதித்து உள்ளே அனுப்ப வாய்க்கு நேராக இரண்டு காவற்காரர்களைப் போல் இரு நாசிகளை அமைத்தார். உண்ணுகின்ற உணவை பல் மெல்லவும், நாவில் நீர் ஊறவும் அமைத்தார். நம்முடைய உடம்பில் எல்லா அவயவங்களிலும் நரம்புகள் உள. நாவில் மட்டும் நரம்புகள் இல. ஏனோ?

நரம்புள்ள பகுதிகள் கனுக்கிக்கொள்ளும் நாவில் நரம்பு வைத்திருந்தால்ஒரு நாளுக்கு நூறு முறையா

வது கஞக்கிக்கொள்ளும். விளக்கெண்ணைய் தடவி உருவ வேண்டிவரும். இறைவன் கருணையினால் இடையருது பேசுகின்ற நாவை நரம்பின்றி படைத்துக் கொடுத்தான். அவன் கொடுத்த நாவினால் அவனுடைய நாமங்களைச் சொல்லுதல் நன்றி பாராட்டுதலாகும். அவன் கொடுத்த தலையினால் அப்பரம பிதாவை வணங்குதல் நன்றிக் கடனாகும். வடமொழியில் காலையும், மாலையும் கடவுளை வணங்குவதை *சந்தியாவந்தனம்* என்பார்கள், சம்=செவ்வையாக, தியா=தியானித்து, வந்தனம் = வணங்குவது சந்தியாவந்தனமாகும். இந்தச் சொல்லைப் பார்க்கினும் ஒரு கோடி மடங்கு பொருளாழம் உள்ளதாக கடவுளை வணங்குவதற்குக் காலைக்கடன், மாலைக்கடன் என்று தமிழில் ஆன்ரோர் கூறினர். கொடுத்த கடனைத் திருப்பிக் கொடாதது எத்துணைப் பெரிய பாபமாகுமோ, அத்துணைப் பெரிய பாபமாகும் இறைவனை வணங்காதிருத்தல். ''என் கடன் பணிசெய்து கிடப்பதே'' என அப்பர் பெருமான் குறிப்பிடுகின்ருர்.

கருணையே வடிவாகிய இறைவன் உயிர்களின் மீதுள்ள இரக்கத்தினால் இந்த உடம்பை வழங்கினான் என்பதை முன்னர் அறிந்தோம். அவன் தந்த உடம்பினால் அவனை வழிபடுவது கடமையாகும். இன்றேல் கடமையை மறந்த மடமையாகும். காவிரியில் ஒருவன் நீராடுவது காவிரிக்கு நன்மை விளையும் பொருட்டன்று. தன் உடம்பிலுள்ள வெட்பம் தணியும்

பொருட்டுக் காவிரியில் நீராடுகின்றான். அதுபோல் அருட் கடலாயிருக்கிற ஆண்டவனை வழிபட்டால் நம்முடைய பிறவி வெப்பம் தணிகின்றது.

"ஆர்த்த பிறவித்துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் நன்றில்லைச் சிறம்பலத்தே தீயாடும்
கூத்தன்"

என்று மாணிக்க வாசக சுவாமிகள் திருவெம்பாவையில் அருளிச் செய்கின்றார்.

ஆதலின் அப்பர் பெருமான் இறைவன் நமக்கு தலை முதலிய கருவிகளைத் தந்தான் என்று தெரிவித்து விட்டு அக்கருவிகளை நோக்கி இறைவழிபாடு செய்யுங்கள் என்றும் அருளிச் செய்கின்றார்.

*வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும்*
*தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை*
*சூழ்ந்த மாமலர் தூவித் துதியாதே*
*வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே*

*"தலையே நீ வணங்காய் —*
*தலைமாலை தலைக்கணித்து*
*தலையாலே பலி தேரும் தலைவனை*
*தலையே நீ வணங்காய்"*

உடம்பின் பயன் இறைவனை வணங்குவதாகும். அறிவின் பயன் இறைவனை அறிவதாகும். கல்வியின் பயன் கடவுளைத் தொழுவதாகும்.

''கற்றதனுலாய பயன் என்கொல்? வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்'' —திருவள்ளுவர்.

சென்றது காலம் சிதைந்த(து) இள்மைநலம்
நின்றதுசா வென்று நினைந்துருகி-மன்றில்
நடிக்கின்ற பால்வண்ணர் நாமமெண்ணு மாந்தர்
படிக்கின்ற நூல் எல்லாம் பாழ்.

அதிவீரராமபாண்டியர்.

இறைவனுடைய திருவடியில் அன்பில்லாதவர் கல்வியின் பெருக்காலும். குலத்தின் முறுக்காலும் நன்மையடைய மாட்டார்.

கற்றதனுற் ருெல்வினைக் கட்டறுமோ நல்லகுலம்
பெற்றதனுற் போமோ பிறவிநோய்—உற்றகடல்
நஞ்சுகந்து கொண்டருணை நாதனடித் தாமரையை
நெஞ்சுகந்து கொள்ளா நெறி.

– அருணகிரியந்தாதி.

ஆதலால், மனிதப் பிறப்புக்கு இறைவழிபாடு இன்றியமையாதது என உணர்க. ஒரு மாவட்டத்திற்கும், மற்ருெரு மாவட்டத்திற்கும் அரசாங்கத்தார் ஓர் எல்லைக்கல் அமைத்திருப்பது போல், விலங்குகட்கும் மனிதனுக்கும் இடையில் இட்ட எல்லைக்கல் இறைவழிபாடாகும். இறைவழிபாடு இல்லாத மனிதன் விலங்கெனவும், இறைவழிபாடு செய்கின்ற விலங்கு தேவன் எனவும உணர்க.

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் எறும்பு வழிபட்ட திருவெறும்பூரும், யானை வழிபட்ட திருவானைக்காவும் காட்சி தருகின்றன. எறும்பு முதல் யானை ஈருக எல்லாவுயிர்களும் இறைவனை வழிபடவேண்டும் என்பதும் போதருகின்றது.

> எறும்பு கடை யானைதலை ஈசனைப்பூ சித்துப்
> பெறுங்கதிகண் டுங்தேருர் பேய்கள்—அறிந்த
> உலகத்தா ருண்டெடன்ப தில்லென்பான் வையத்
> தலகையாய் வைக்கப்படும்.
>
> – முதுமொழிமேல்வைப்பு

## *வழிபடும் முறை*

கோயிலில் வழிபடுவோர் நீராடி, தூய ஆடை அணிந்து, சமயச் சின்னங்கள் தரித்து அன்புடனும், ஆசாரமுடனும் கோயிலுக்குச் செல்லுதல் வேண்டும்.

கொடி மரத்திற்கு வெளியே விழுந்து வணங்குதல் வேண்டும். உள் பிராகாரங்களில் விழுந்து வணங்குதல் குற்றம்.

விநாயகரை ஒரு முறையும், சிவமூர்த்தியை மூன்று முறையும், அம்பிகையை நான்கு முறையும் வலம் வருதல் வேண்டும்.

கோயிலில் ஒருமைப்பட்ட மனத்துடன் வழிபாடு செய்யவேண்டும். கோயிலில் வழிபடுவோர் வீண் வார்த்தைகள் பேசுவதும், எச்சில் துப்புதலும், பிற தீமைகள் செய்தலுங் கூடா. அர்ச்சகர் தரும் விபூதி,

பிரசாதங்களைப் பயபக்தியுடன் இரு கரங்களாலும் ஏந்திப் பெறுதல் வேண்டும். பெற்ற பிரசாதத்தைக் கீழே சிந்துதலும், ஒரு புறத்தில் எறிவதும் பெரும் பாவமாகும். சண்டேசுவரர் மீது நூல் இடுவதும், சிவலிங்கத்திற்கும், நந்தி தேவருக்கும் இடையே போவதும் குற்றமாகும்.

கோயிலில் பிரசாதங்களை உண்டு கோயில் தூண்களில் துடைப்பது அனுசிதமாகும். கோயிலில் படுத்து உறங்குவோர் மறுபிறப்பில் மலைப்பாம்பாகப் பிறப்பார்கள். வழிபாடு முடிந்தபின் கொடிமரத்தின் அருகிலிருந்து வடதிசை நோக்கி யமர்ந்து மூல மந்திரம் ஜெபிக்க வேண்டும். நன்கு இனிமையாக தோத்திரப் பாடல்களை அதிகம் சப்தம் போடாமல் இனிய குரலில் துதிக்கவேண்டும். கோயில் விளக்குகளில் எண்ணெய் இடுதல் வேண்டும்.

''விளக்கிட்டார் பேறுசொல்லில் மெய்நெறி
ஞானமாகும்''
– அப்பர்.

கோயிலில் அணைகின்ற விளக்கை அபுத்தி பூர்வமாகத் தூண்டிய எலி பலிச் சக்கரவர்த்தியாகப்பிறந்து புகழ் பெற்றது.

''நீளுகின்ற நெய்யருந்த நேரெலியை மூவுலகும்
ஆளுகின்ற மன்னவனாய் ஆக்கினையே''
– திருவருட்பா.

## வீட்டு வழிபாடு

இனி நாள்தோறும் குடும்பத்தில் உள்ளோர் அனைவரும் ஒன்று கூடி காலை அல்லது மாலையில் வழிபடவேண்டும். வீட்டுத் தலைவன் ஒரு பாடலைச் சொல்ல ஏனையோர் அதனை வழிமொழிந்து சொல்ல இறைவனை காதலுடன் வழிபாடு செய்ய வேண்டும். இதனால் குடும்பத்தில் ஒற்றுமை உண்டாவதுடன் அந்த வீட்டில் தெய்வகடாக்ஷமும் திருமகள் விலாசமும் உண்டாகும்.

## கூட்டு வழிபாடு

ஒரு தனி இழையை எளிதில் அறுத்து விடலாம். பல இழைகள் ஒன்றுபட்டுத் திரித்த கயிறு (வடம்) தேரை இழுந்துவிடும். அதுபோல், பல அன்பர்கள் வாரத்திற்கொரு நாள் கோயிலில் ஒன்றுபட்டு கூட்டு வழிபாடு செய்தால் திருவருளை ஈர்த்து விடலாம். முஸ்லீம் அன்பர் தினம் ஒன்றுககு ஐந்துவேளை தவறுமல் தொழுவதும், கிறிஸ்தவ அன்பர்கள் ஞாயிறு தோறும் ஆண் பெண் அடங்கலும், தங்கள் தேவாலயத்திற்குச் சென்று நியதியாகத் தொழுவது போல், இந்துக்களாகிய நாம் குறிப்பிட்ட நாட்களில் ஆங்காங்குள்ள ஆலயங்களில் நியதியாக வழிபடுவது மிக மிக அவசியமாகும். அண்ணல் காந்தியடிகள் இறுதியாகப் பிரார்த்தனைக்கூட்டம் நாள்தோறும் நடாத்தி முடிவில் பிரார்த்தனைக்கூட்டத்திலேயே ஆத்ம சாந்தியடைந்தார். ஆதலால் அன்பர்கள் காதலாகிக் கசிந்து கடவுளை வழிபட்டு இகபர நலன்களை எளிதில் பெறுதல் வேண்டும். இறைவழிபாடு செய்து பிறவிப் பிணியை ஒழித்துப்பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவார்களாக.

# வேலை வணங்குவதே எங்கள் கடமை

1 வேலை வணங்குவது எமக்கு வேலை
வேண்டும் வரம்தருவது வேலனுக்கு வேலை
(வேலை)

2 காலையும் மாலையும் கந்தனடி தனிலே
கருத்தினை நிறுத்தி கவிபாடி மகிழ்வேன்
(வேலை)

3 இன்பத் திருப்புகழ் இன்னிசை பாடினேன்
இகத்திலும் பரத்திலும் இன்பமே யருள்வான்
(வேலை)

4 மலைதோறும் குடிகொண்ட மகிமை
பெறுந்தெய்வம்
மலைபோல வந்த வினை விலகும் (வேலை)

5 வாயிலும் மனத்திலும் வடிவேலை வாழ்த்தவே
தாயினும் பரிந்து தயை காட்டியருள்வான்
(வேலை)

6 வஞ்சமில்லா நெஞ்சகம் தனிலே
வடிவேலன் வந்து குடியாக வாழ்வான்
(வேலை)

7 வள்ளி தெய்வானையுடன் வண்ண மயில்மீதே
வந் தென்னைக்காத்து வழிகாட்டவேண்டும்
(வேலை)

8 இல்லாமை சொல்லி ஒருவனிடம் சென்று
நில்லாமை தன்னை நீயருளவேண்டும்
(வேலை)

9 பதினாறு பேறும் நீ தந்து என்னை
பக்ஷமாய் ரக்ஷிக்க வந்தருளவேண்டும்.
(வேலை)

உ

## இராமலிங்க சுவாமிகள் அருளிய

# கந்தர் சரணப் பத்து

1

அருளா ரமுதே சரணம் சரணம்
அழகா அமலா சரணம் சரணம்
பொருளா எனையாள் புனிதா சரணம்
பொன்னே மணியே சரணம் சரணம்
மருள்வார்க்(கு) அரியாய் சரணம் சரணம்
மயில்வா கனனே சரணம் சரணம்
கருணா லயனே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

2

பண்ணேர் மறையின் பயனே சரணம்
பதியே பரமே சரணம் சரணம்

விண்ணோர் ஒளியே சரணம் சரணம்
வெளியின் விளைவே சரணம் சரணம்
உண்ணோர் உயிரே உணர்வே சரணம்
உருவே அருவே உழவே சரணம்
கண்ணே மணியே சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்.

3

முடியா முதலே சரணம் சரணம்
முருகா குமரா சரணம் சரணம்
வடிவேல் அரசே சரணம் சரணம்
மயிலேறு மணியே சரணம் சரணம்
அடியார்க்(கு) எளியாய் சரணம் சரணம்
அரியாய் பெரியாய் சரணம் சரணம்
கடியாக் கதியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்.

4

பூவே மணமே சரணம் சரணம்
பொருளே அருளே சரணம் சரணம்
கோவே குகனே சரணம் சரணம்
குருவே திருவே சரணம் சரணம்
தேவே தெளிவே சரணம்
சிவசண் முகனே சரணம் சரணம்
காவேர் தருவே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

5

நடவும் தனிமா மயிலோய் சரணம்
நல்லோர் புகழும் வல்லோய் சரணம்
திடமும் திருவும் தருவோய் சரணம்
தேவர்க் கரியாய் சரணம் சரணம்
தடவண் புயனே சரணம் சரணம்
தனிமா முதலே சரணம் சரணம்
கடவுள் மணியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

6

கோலக் குறமான் கணவா சரணம்
குலமா மணியே சரணம் சரணம்
சீலத் தவருக்(கு) அருள்வோய் சரணம்
சிவனார் புதல்வா சரணம் சரணம்
ஞாலத் துயர்தீர் நலனே சரணம்
நடுவா கியநல் ஒளியே சரணம்
காலற் றெறுவோய் சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

7

நங்கட் கிளியாய் சரணம் சரணம்
நந்தா உயர்சம் பந்தா சரணம்
திங்கட் சடையோன் மகனே சரணம்
சிவைதந் தருளும் புதல்வா சரணம்
துங்கச் சுகம்நன் றருள்வோய் சரணம்
சுரர்வாழ்த் திடுநம் துரையே சரணம்
கங்கைக் கொருமா மதலாய் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

8

ஒளியுள் ஒளியே சரணம் சரணம்
ஒன்றே பலவே சரணம் சரணம்
தெளியும் தெளிவே சரணம் சரணம்
சிவமே தவமே சரணம் சரணம்
அளியும் களியே சரணம் சரணம்
அமுதே அறிவே சரணம் சரணம்
களியொன்(று) அருள்வோய் சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

9

மன்னே எனையாள் வரதா சரணம்
மதியே அடியேன் வாழ்வே சரணம்
பொன்னே புனிதா சரணம் சரணம்
புகழ்வார் இதயம் புகுவோய் சரணம்
அன்னே வடிவேல் அரசே சரணம்
அறுமா முகனே சரணம் சரணம்
கன்னேர் புயனே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்.

10

வேதப் பொருளே சரணம் சரணம்
விண்ணோர் பெருமான் சரணம் சரணம்
போதத் திறனே சரணம் சரணம்
புனைமா மயிலோய் சரணம் சரணம்
நாதத் தொலியே சரணம் சரணம்
நவைகில் லவனே சரணம் சரணம்
காதுக் கினிதாம் புகழோய் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

—திருவருட்பா இராமலிங்க சுவாமிகள்

## தினசரி வழிபாட்டுக்குரிய: பக்திப் பாடல்கள்.

### விநாயகர்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்துஅடி போற்றுகின் றேனே.

— திருமந்திரம்

### முருகன்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே! குகனே!
சொற் குமரேசா !
அறநாலைப் புகல்வோனே! அவிநாசிப் பெருமாளே.

— திருப்புகழ்

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச்
செஞ் சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை
விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவா தவர்க்கொரு
தாழ்வில்லையே. -கந்தரலங்காரம்

நாள்என் செயும்வினை தான்என் செயும்எனை
நாடிவந்த

கோள் என் செய்யும்கொடுங் கூற்(று) என்செய்யும்கும
ரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும்
சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து
தோன்றிடினே
- கந்தரலங்காரம்

## சிவபெருமான் துதி

தோடுடைய செவி யன்விட யேறியோர் துவெண்
மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியென் உள்ளங் கவர்
கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்த
அருள்செய்த
பீடுடையபிர மாபுரம் மேவிய பெம்மானிவ னன்றே.
— ஞானசம்பந்தர்

புழுவாய்ப்பிறக்கினும் புண்ணியா உன்னடி
யென்மனத்தே
வழுவா(து) இருக்க வரந்தர வேண்டும்
இவ்வையகத்தே
தொழுவார்க்(கு) இரங்கி இருந்தருள்
செய்பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனல் கங்கை செஞ்சடை மேல்வைத்த
(தீவண்ணனே.
— அப்பர்.

## அம்பாள் துதி

காரொழுங் குழலாளைக் கருணைவழிந்
தொழுகுமிரு கடைக்கண் ணாளை
மூரலிள நிலவொழுகப் புழுகொழுக
அழகொழுகு முகத்தி னாளை
வாரொழுகுந் தனத்தாளை வடிவொழுகித்
தெரியாத மருங்கு லாளைச்
சீரொழுகும் பதத்தாளை அருணையுண்ணா
முலையாளைச் சிந்தை சேர்ப்பாம்

- அருணாசலபுராணம்

தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில்
(வஞ்சமிலா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர்
(என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே.

- அபிராமியந்தாதி

## நடராஜர்

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

குனிந்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் [குமிண்சிரிப்பும்
பனித்த சடையும பவளம்போல் மேனியிற் [பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்- [பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே

## தட்சிணாமூர்த்தி

கல்லாலின் புடையமர்ந்து நான் மறையா றங்கமுதற் [கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் [மறைக்கப்பாலாய்
எல்லாமா யல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி [இருந்துகாட்டி
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத் [தொடக்கை வெல்வாம்.

- திருவிளையாடற் புராணம்

## திருமால் துதி

ஆரணனை ஆரணத்துட் பொருளை அண்டம்
அளந்தானை அளக்கரிய ஆடலானைக்
காரணனைக் காரணங்கள் கடந்தோன் தன்னைக்
கண்மணியைக் கண்மணிக்குள் ஒளியாய் நின்ற
பூரணனைப் பூரணப்பொற் கலசக் கொங்கை
பூமாது நாயகனைப் பொருவில் செங்கை
வாரணனை வாரணமுன் வந்து தோன்றும்
மாதவனைக் காதலுடன் வணங்கி வாழ்வோம்.

— நல்லாப்பிள்ளை பாரதம்.

ஆறிரு தடந்தோள் வாழ்க; அறுமுகம் வாழ்க [வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க; குக்குடம் வாழ்க; [செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க; யானைதன் அணங்கு வாழ்க;
மாறிலா வள்ளி வாழ்க; வாழ்க சீர் அடியார் எல்லாம்

## நாள்தோறும் அடியிற் குறித்த நேரங்களில் இவைகளை ஓதிப் பயன் பெறுங்கள்.

1. காலை எழுந்தவுடன்:

"காலையிலெழுந் துன் நாமமெ மொழிந்து
காதலுமை மைந்த – எனவோதிக்
காலமு முணர்ந்து ஞானவெளி கண்கள்
காண அருள் என்று பெறுவேனோ?"

(878) "மாலைதனில்" கும்பகோணம் திருப்புகழ்

"தழைந்த சிவசுடர் தனையென மனதினில்
அமுந்த வுரைசெய வருமுக நகையொளி
தழைந்த நயனமு மிருமலர் சரணமும்
- மறவேனே!"

(188) குரம்பை......பழநித் திருப்புகழ்.

2. வழிபாடு தொடங்கும்போது:

"உம்பர்கள் சுவாமி நமோ நம
எம்பெருமானே நமோ நம
ஒண்டொடி மோகா நமோ நம – என நாளும்"
"உன் புகழே பாடி நானினி
அன்புடன் ஆசார பூஜைசெய்
துய்ந்திட வீணாள் படாதருள் புரிவாயே"

(39) கொம்பனையார்........ திருச்செந்தூர் திருப்புகழ்:

## 3. வெளியே புறப்படும்போது :

"சேயவன் புந்தி வனவாச
    மாதுடன் சேர்ந்த செந்திற்
சேயவன் புந்தி கனிசா
    சராந்தக சேந்த வென்னிற்
சேயவன் புந்தி பனிப்பானு
    வெள்ளிபொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற
    வேதருஞ் சேதமின்றே"

— கந்தர் அந்தாதி.

## 4. ஒரு செயலைத் தொடங்கும்போது :

"நிகழ்த்து மேழ்பவ கடற்குறையாகவே
எடுத்த வேல்கொடுபொடித் தூள தாயெறி
நினைத்த காரியம் அனுக்கூலமே புரி பெருமாளே"

(431) "விலைக்குமேனியில்" திருக்கோணமலைத் திருப்புகழ்.

## 5. உணவு சாப்பிடும்போது :

"அருமறைகளே நினைந்து மனு நெறியிலே
நடந்து அறிவை அறிவாலறிந்து நிறைவாகி
அகிலபுவனாதி யெங்கும் வெளியுற மெய்ஞ்
ஞான இன்ப அமுதையொழி யாதருந்த
அருள்வாயே"

(133) சுருளளக......பழநித் திருப்புகழ்.

"அருள்மொழி அரசு"

## திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின்

# பொன்மொழிகள்

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷோர்த்தங்களை அடையும் உபாயங்கள்.

1 மாசிலா மனமே ஈசன் கோயில்

2 பயிருக்கு முள் வேலி. பணத்துக்கு தரும வேலி.

3 பாலுந் தேனும் உடலுக்குறுதி; வேலும் மயிலும் உயிருக்குறுதி.

4 ஆறுதலையமலன் ஆறுதலையருள்வான்

5 எல்லாவுயிரும் ஈசன் கோயில்

6 அயர்ச்சியில்லாத முயர்சி உயர்ச்சி தரும்.

7 வேலையுடையவனிடத்தில் வேலை கேள்.

8 எழுந்ததும்:- இறைவா! நான் நல்வழியில் நிற்க அருள் செய் என்று எண்ணவும்.

9 உண்ணும்போது :- இறைவா! எனக்கு நல்ல அறிவும், அன்பும் உண்டாக அருள் புரி எனவும்

10 உறங்கும்போது:- இறைவா! உன்னுடைய எண்ணமே நிற்க அருள்வாய் எனவும் தொழுவாயாக!

11 கண்ணுக்கு அணிகலம் தாட்சண்யம்; மனதிற்கு அணிகலம் தியானம்.

12 இரை தேடுவதோடு இறையுந் தேடு

13 பிறரைக் கெடுத்து தான் மட்டும் வாழ நினைத்தல் ஆசை; தான் மட்டும் வாழ நினைத்தல் பற்று; தானும், தன் இனமும், தன் நாடும் வாழ நினைத்தல் அன்பு; சராசரம் வாழ நினைத்தல் அருள் எனப்படும்.

14 தானே சொல்வதால் குறைதல்:- புண்ணியமும், பாவமுமே.

15 முதுமைக்கு வேண்டின் இளமையில் தேடி. மறுமைக்கு வேண்டின் இம்மையில் தேடு.

16 உணவு தேடுவதோடு உணர்வுந் தேடு.

17 செல்வம் அழியாமலிருக்க :- ஏழைகள் கண்ணீர் பிறர் பொருளின் மேல் ஆசை, அநியாய வழியில் பொருள் ஈட்டல் முதலியன கூடாது.

18 ஒருமையுணர்வு இருமையுந் தரும்.

19 செல்வம் அடக்கத்தால் நிலை பெறுகின்றது.

20 யானைக்கு மூன்று மதங்களைப்போல மனிதனுக்கும் தன் மதம், குல மதம், கல்வி மதம் என்ற மூன்று மதங்கள் உண்டு.

21 ஏழைகளுக்காக உழைக்கும் உத்தமனுடைய முகத்தில் துளிக்கும் வியர்வை சிறந்த தீர்த்தமாகும்.

22 ஆமணக்கு இலையிலும், பனை ஓலைக் கூடையிலும் வைத்த புஷ்பம் பூஜைக்கு ஆகாது.

23 உளம் வசமானல் உலகம் வசமாகும்.

24 பிரமனிடம் செய்த பாவம் விஷ்ணுவினிடமும், விஷ்ணுவினிடம் செய்த பாவம் சிவனிடமும். சிவனிடம் செய்த பாவம் குருவினிடத்திலும், அழிந்துவிடும். குருவிடம் செய்த பாவம் அழியாது நிற்கும்.

25 ஆயுள் வளர:- மாலை வெயில், ஓமப்புகை, இளம் மனைவி, அருவி நீர், இரவில் பால் அன்னம் முதலியன ஆகும்.

26 தன் கையால் செய்யக் கூடாதவை :— படுக்கை விரித்துக்கொள்ளல், ஆசனப் பலகை இட்டுக் கொள்ளல், அன்னம் படைத்துக்கொள்ளல் இம் மூன்றும் தன்கையால் செய்து கொண்டால் ஆயுள் குறையும்.

27 இரவில் கூடாதவை :— இஞ்சி, பாகற்காய் கஞ்சி, கட்டித் தயிர், இலைக்கறி, நெல்லிக்காய் உண்ணக்கூடாது- உண்டால் இலட்சுமி கடாட்சம் நீங்கும்.

28 அன்னம், நெய், உப்பு மூன்றையும் கைய படைக்கக் கூடாது.

29 யானையைப் போல குளிப்பாயாக, தேனீயைப் போல் உழைப்பாயாக.

30 ஆரோக்கியம் பெறவேண்டி ஆதித்தனை வணங்கு செல்வம் பெற அக்கினியை வணங்கு. ஞானம் பெற முருகனை நினைந்து வணங்கு. சுகம் பெற

திருமாலைப் போற்று. ஆற்றல் பெற அம்பிகையைத் தொழு.

31 உடை ஒன்றுடுத்தி சபை போகக்கூடாது. இரு கைகளாலும் தண்ணீர் வாரிக்குடிக்கக்கூடாது

32 வறுமையுள்ளவனுக்கு எல்லாமே பாழ்.

33 இரவில் கிழக்கு தலை வைத்து படுத்தல் நல்லது. வடக்கு தலை வைத்து படுத்தல் எப்போதும் கூடாது:

34 தூய உணவை உண்டால் தூய குணம் வளரும்.

35 குருவருளும், திருவருளும் பெற்றால் இறைவன் ஞான வடிவைக் காணலாம்.

36 மன அழுக்கு தியானத்தாலும், வாயழுக்கு துதிப்பதாலும், மெய்யழுக்கு அருச்சனையாலும் நீங்கும்.

37 குரோதம், பொறாமை உள்ளவனுக்குச் செல்வம் இல்லை.

38 நாம் ஏன் பிறந்தோம்? எங்கிருந்து வந்தோம் ? எங்கே போக வேண்டும் ? எங்கே போய்க் கொண்டு இருக்கிறோம்? இந்த உடம்பு எப்படி வந்தது? தானே வந்ததா ? ஒருவன் தந்து வந்ததா? தந்தவன் யார்? என்ற வினாக்கள் உன் உள்ளத்தில் எழுக.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. 39258

சக்தி விநாயகர் பிரஸ்,
17, கான்சாமேட்டுத் தெரு,
மதுரை-625001.